Find us on facebook/tamilmirror    Follow us on tamilmirror    epaper/tamilmirror.lk

# தமிழ்Mirror

www.tamilmirror.lk

MONDAY, MARCH 03, 2025

திங்கட்கிழமை 03, மார்ச் 2025 | ஒளி: 10 கதிர்: 170 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE



## ரமழான் நோன்பு ஆரம்பம்

இலங்கையில் உள்ள முஸ்லிம்கள் ஞாயிற்றுக்கிழமை(02) முதல் ஒரு மாத கால நோன்பைக் கடைப்பிடிக்கவுள்ளனர்.

சனிக்கிழமை (01) இரவு அமாவாசை காணப்பட்டதைத் தொடர்ந்து நோன்பைத் தொடங்க முடிவு செய்யப்பட்டதாக தேசிய ஒருங்கிணைப்பு துணை அமைச்சர் முகமது முனீர் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

### வட்டுவாகல் விஹாரைக்கு அடியில்

# “சரணடைந்தவர்கள் புதைக்கப்பட்டுள்ளனர்”



கடந்த 2009ஆம் ஆண்டு இறுதிக்கட்ட யுத்தத்தின் போது, இராணுவத்தினரிடம் சரணடைந்தவர்கள் படுகொலை செய்யப்பட்டு, தற்போது முல்லைத்தீவு - வட்டுவாகல் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள விகாரையின் கீழ் பகுதியில் புதைக்கப்பட்டிருப்பதாக மக்கள் என்னிடம் முறையிட்டுள்ளனர்.

எனவே, விகாரையை அகற்றி அகழ்வினை மேற்கொண்டோ, நவீன முறையில் ஸ்கேன் கருவிகள் மூலமோ ஆய்வுகளை மேற்கொண்டு உண்மையைக் கண்டறிய அரசாங்கம் முன்வர வேண்டும் என வன்னி மாவட்ட எம்.பி. துரைராசா ரவிகரன் வலியுறுத்தியுள்ளார்.

பாராளுமன்றத்தில் சனிக்கிழமை (01) இடம்பெற்ற 2025ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு வலியுறுத்தியுள்ளார்.

மேலும், “யுத்தம் மௌனிக்கப்பட்ட போது தமது உறவுகளை, குறிப்பாக கணவனை மனைவியும், மகன், மகளைப் பெற்றோரும் வட்டுவாகல் சப்த கன்னிமார் ஆலய முன்றலில் ஒப்படைத்தார்கள். தடுப்பு முகாம்கள், கடல் எனப் பல இடங்களிலும் சரணடைந்தார்கள்.

வட்டுவாகலில் ஒப்படைக்கப்பட்டவர்களை கொக்குத்தொடுவாய் நோக்கியும், கேப்பாப்புலவு நோக்கியும், வட்டுவாகல் கடற்கரை நோக்கிய பாதையிலும் பஸ்களில் கொண்டுசெல்லப்பட்டார்கள்.

தொடர்ச்சி P2

# “எரிபொருள் பிரச்சினைக்கு உரிய தீர்வு இல்லை”

எரிபொருளை 3 சதவீத கழிவு கொடுப்பனவு செய்வதற்கு இதுவரையில் உரிய தீர்வு எட்டப்படவில்லை என இலங்கை கனியவள விநியோகஸ்தர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சியான எரிபொருள் விநியோகத்தை உறுதி செய்வதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளதாகவும்

வார இறுதி விடுமுறை நாளான ஞாயிற்றுக்கிழமையும் (02) எரிபொருள் விநியோகம் இடம்பெறுவதாகவும் இலங்கை கனியவளக் கூட்டுத்தாபன தலைவர் டி.ஜே.ராஜகருணா கூறியுள்ளார்.

தொடர்ச்சி P2



## “தமிழ் அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய்க”

நீண்டாகாலமாக சிறைகளில் இருக்கும் ஆனந்த சுதாகர் உட்பட பல தமிழ் அரசியல்கைதிகளை உடனடியாக விடுவிக்குமாறு வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கோரிக்கை விடுத்துள்ளார்.

பாராளுமன்றில் சனிக்கிழமை (01) இடம்பெற்ற 2025ஆம் ஆண்டுக்கான வரவு- செலவுத் திட்ட நீதி மற்றும் தேசிய ஒற்றுமைப்பாடு அமைச்சிற்கான குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே இக்கோரிக்கையை முன்வைத்துள்ளார்.

தொடர்ச்சி P2

### ஜனாதிபதியின் ஜப்பான் விஜயத்தில்

# பொருளாதார ஒப்பந்தங்கள்

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க எதிர்வரும் 22ஆம் திகதி அளவில் ஜப்பானுக்கு நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார்.

இந்த விஜயத்தின்போது, இருநாட்டு பொருளாதார ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட உள்ளதாக வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, வெளியுறவுத் துறைக்கான ஜப்பான் பாராளுமன்ற துணை அமைச்சர் இகுய்னா அகிகோவை சந்தித்த வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேறாத்,

தொடர்ச்சி P2



### ஊடகவியலாளர் கடத்தல் சம்பவத்தில்

# முன்னாள் சி.ஐ.டியினர் கைது



ஊடகவியலாளர் கீத் நொயார் கடத்தல் சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் என சந்தேகிக்கப்படும் முன்னாள் இராணுவ புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த 2008ஆம் ஆண்டு மே மாதம் 22ஆம் திகதி தெஹிவளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வைத்தியா வீதிப் பகுதியில் வைத்து ஊடகவியலாளர் கீத் நொயார் வேனில் கடத்தப்பட்டு தாக்கப்பட்டுள்ளார்.

இந்த சம்பவத்துடத்துடன் தொடர்புடைய இரண்டு சந்தேகநபர்கள் சனிக்கிழமை (01) அன்று குற்றப்புலனாய்வு திணைக்கள அதிகாரிகளினால் நவகத்தேகம மற்றும் எலயபத்துவ பொலிஸ் பிரிவுகளில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 42 மற்றும் 46 வயதுடைய நவகத்தேகம மற்றும் உலுக்குளம பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனவும், இராணுவ புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த ஓய்வுபெற்ற இராணுவ புலனாய்வுப் பணியாளர்கள் எனவும் தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.




## வெளிநாடுகளிலுள்ள பாதாள உலக நபர்களுக்கு

# எச்சரிக்கை

வெளிநாடுகளுக்கு தப்பிச் சென்றுள்ள இலங்கையில் திட்டமிட்ட குற்றங்கள் மற்றும் கொலைகளை நடத்தி வரும் 293 பாதாள உலக உறுப்பினர்களுக்கு சர்வதேச பொலிஸார் (இன்டர்போல்) இதுவரை சிவப்பு, நீலம் மற்றும் மஞ்சள் அறிவிப்புகளை வெளியிட்டுள்ளது.

இவ்வாறு 199 சிவப்பு அறிவிப்புகள், 90 நீல அறிவிப்புகள் மற்றும் 4 மஞ்சள் அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன.

வெளிநாட்டில் உள்ள குற்றவாளிகளை இலங்கைக்கு அழைத்து வருவதற்கு பொலிஸாருக்கு சர்வதேச ஆதரவு கிடைத்துள்ளது.

தொடர்ச்சி P2



## “த.தே.கவுடன் இணைந்து தேர்தலில் போட்டியிட தீர்மானம்”

நாட்டில் இடம்பெறவுள்ள உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஏனைய தமிழ் தேசியக் கட்சிகளுடன் எவ்விதத்தில் அணுக முடியும் என்றும், தேர்தலுக்கு பின்னர் வெவ்வேறு அணிகளாக போட்டியிட்டாலும், ஆட்சி நிர்வாகங்களை அமைக்கின்ற போது, சேர்ந்து அமைக்கக்கூடிய வகையில், தேர்தலுக்கு முன்னர் ஒரு நிலைப்பாட்டை ஏற்படுத்தும் வகையில்,

தொடர்ச்சி P2

## “உடனடி தீர்வு வேண்டும்”



நாடு எதிர்நோக்கியுள்ள எரிபொருள் பிரச்சினை தொடர்பில் விநியோகஸ்தர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி, உடனடியாக தீர்வுகளை வழங்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச கோரிக்கை விடுத்துள்ளார்.

அனுராதபுரம் - மதவச்சி பகுதியில் சனிக்கிழமை (01) அன்று நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் கூறியுள்ளதாவது, எரிபொருள் விநியோகஸ்தர்களுடனான ஒப்பந்தத்தை எவ்வித கலந்துரையாடலும் இன்றி தற்போதைய அரசாங்கம் திடீரென நிராகரித்துள்ளமையால், நாட்டில் தற்போது எரிபொருள் வரிசை ஏற்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## “IMFஇடமிருந்து 334 மில்லியன் டொலரை பெற்றதில் மகிழ்ச்சி”



பொருளாதாரத்தின் மீதான நம்பிக்கையை மேலும் வலுப்படுத்தி, 3ஆவது மதிப்பாய்வை வெற்றிகரமாக முடித்ததைத் தொடர்ந்து, நீடிக்கப்பட்ட கடன் வசதி திட்டத்தின் 4ஆவது தவணையாக நிதி பெற்றதில் மிகவும் மகிழ்ச்சியடைவதாக முன்னாள் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார். இது தொடர்பில் தனது உத்தியோகபூர்வ எக்ஸ் தளத்தில் அவர் பதிவிட்டுள்ளதாவது,நாட்டின் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் தலைமையின் கீழ் இரண்டு வருடங்களில் மிக மோசமான பொருளாதார நெருக்கடியிலிருந்து விரைவாக மீண்டிருப்பது நடைமுறைப்படுத்தப்பட்ட கொள்கைகளின் வினைத்திறனுக்கான சான்றாகும்.பொருளாதார ஸ்திரத்தன்மை மற்றும் கடன் நிலைத்தன்மை ஆகியவற்றிற்கான தூண்களாகச் செயல்பட்டு,

தொடர்ச்சி P2

## “தேயிலைத் தொழிலில் மாற்றம் அவசியம்”

ரஞ்சித் ராஜபக்ஷ



இந்த நாட்டில் 150 ஆண்டுகள் பழைமையான தேயிலைத் தொழிலில் தற்போதுள்ள அமைப்பை மாற்றி, உற்பத்தித்திறனின் அடிப்படையில் தேயிலைத் தொழிலை நடத்த வேண்டிய நேரம் வந்துவிட்டது என்று ஹேலிஸ் குழுமத் தோட்டங்களின் நிர்வாக இயக்குநரும்,

தொடர்ச்சி P2

## “ஜனாதிபதி பேசாமல் இருப்பது ஏன்?”



அனைத்து பிரச்சினைகள் தொடர்பாகவும் பேசும் ஜனாதிபதி புதிய அரசியலமைப்பு தொடர்பாக மாத்திரம் எதுவும் பேசாமல் இருப்பது ஏன் ? எதிர்க்கட்சியில் இருக்கும் பெரும்பாலானவர்கள் புதிய அரசியலமைப்புக்கு ஆதரவளிக்கத் தயாராக இருக்கின்றனர்.

தொடர்ச்சி P2

## “இந்த கேள்விகளுக்காவது ஜனாதிபதி பதிலளிக்க வேண்டும்”

ராஜபக்ஷர்களின் ஆட்சி காலத்தில் 34 ஊடகவியலாளர்கள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் பெரும்பாலானோர் தமிழ் பேசும் ஊடகவிலாளர்கள். இவ்விடயம் தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடு என்னவென்று இலங்கை தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கேள்வியெழுப்பியுள்ளார்.



பாராளுமன்றத்தில் சனிக்கிழமை (01) இடம்பெற்ற பட்ஜெட் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் உரையாற்றியதாவது,

புதிய அரசியலமைப்பு உருவாக்கம் மற்றும் உண்மையை கண்டறிதல் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு தொடர்பில் அரசாங்கத்திடமும்,

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்



# “சரணடைந்தவர்கள் புதைக்கப்பட்டுள்ளனர்”

இலங்கைப் படையினரிடம் தான் ஒப்படைத்தோம். இன்னும் காணவில்லையே அவர்கள் எங்கே என்று தேடுகின்றார்கள்.

எனவே, நீதி அமைச்சரே நீதி தாருங்கள். நியாயப்படி நடந்து கொள்ளுங்கள். வட்டுவாகல் கடற்கரைப் பாதை நோக்கி பஸ்களில் ஏற்றிக்கொண்டு சென்றவர்களை விட்டு விட்டு பஸ் கள் மட்டும் திரும்பி வந்ததாகவும் மக்கள் சொல்கின்றார்கள்.



வட்டுவாகல் தனித்தமிழ் சைவ கிராமமாகும். பௌத்தர்கள் இல்லாத இடத்தில் ஒரு பெரிய விகாரை அமைக்கப்பட்டுள்ளது. இறுதிக்கட்ட யுத்தத்தின் போது சரணடைந்தவர்களைக் கொண்டுசென்று, படுகொலை செய்து புதைத்து விட்டு அதன் மேல் இவ்வாறு பெரிய விகாரை இங்கு அமைந்துவிட்டதாக மக்கள் கூறுகின்றனர். உங்களின் மடியில் கனமில்லை என்றால் இதனை இல்லையென்று நிரூபியுங்கள்” என்றார்.

## ரமழான் நோன்பு ஆரம்பம்

‘லைலத்துல் கத்ர்’ இரவில் முகமது நபிக்கு குர்ஆன் வெளிப்படுத்தப்பட்ட நேரத்தை நினைவுகூரும் வகையில், உலகம் முழுவதும் உள்ள முஸ்லிம்கள் ரமழான் மாதத்தில் ஒரு மாத நோன்பு மற்றும் பிரார்த்தனைகளைக் கடைப்பிடிப்பார்கள்.

இஸ்லாமிய சந்திர நாட்காட்டியின் ஒன்பதாவது மாதமான ரமழான் மாதத்தில் நோன்பு நோற்பது இஸ்லாத்தின் ஐந்து தூண்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது.

# “எரிபொருள் பிரச்சினைக்கு உரிய தீர்வு இல்லை”

அதேநேரம், நாடு முழுவதும் உள்ள சில எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வெள்ளிக்கிழமை (28) முதல் நிலவிய வாகன வரிசைகள் நேற்றிரவு முதல் குறைந்துள்ளதாக எமது செய்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

இலங்கை கனியவளக் கூட்டுத்தாபனத்திற்கும் எரிபொருள் விநியோகஸ்தர்களுக்கும் இடையிலான தற்போதைய விநியோக ஒப்பந்தத்தின்படி, எரிபொருள் நிரப்பு நிலையங்களின் உரிமையாளர்களுக்கு விற்பனை செய்யப்படும் ஒவ்வொரு லீற்றர் எரிபொருளுக்கும் 3 சதவீத கழிவு கொடுப்பனவு வழங்கப்படுகிறது.

எனினும், சனிக்கிழமை (01) முதல் இந்த ஒப்பந்தத்தை நிறைவுறுத்துவதற்கு இலங்கை கனியவளக் கூட்டுத்தாபனம் நடவடிக்கை எடுத்திருந்தது.

அத்துடன், குறித்த கழிவு தொகையை நிர்ணயிப்பதற்காக ஒரு புதிய முறைமை ஒன்றும் செயல்படுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், மூன்று சதவீத கழிவு கொடுப்பனவு பிரச்சினைக்கு இதுவரையில் உரிய தீர்வு எட்டப்படவில்லை என இலங்கை கனியவள விநியோகஸ்தர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

# வெளிநாடுகளிலுள்ள
## பாதாள உலக நபர்களுக்கு எச்சரிக்கை

மேலும், சமீபத்திய நாட்களில் வெளிநாட்டில் இருந்த 19 குற்றவாளிகள் இலங்கைக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

இந்த செயல்முறை தீவிரமடைவதால், குற்றவாளிகள் மற்ற நாடுகளுக்கு தப்பிச் செல்வதற்கான வாய்ப்புகள் குறைவாக இருக்கலாம் என்று பொலிஸார் கருதப்படுகின்றது.

## “IMFஇடமிருந்து 334 மில்லியன் டொலரை பெற்றதில் மகிழ்ச்சி”

உறுதியான பொருளாதார அடித்தளத்துடன் நாட்டை நாங்கள் ஒப்படைத்தோம்.

தற்போதைய நிர்வாகம் ஏற்கெனவே முடிவுகளை வழங்கிய கடின உழைப்பைத் தொடர்வது மற்றும் நாங்கள் செயல்படுத்திய உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சிறந்த நடைமுறைகளை மாற்றுவதைத் தடுப்பது முக்கியம். ஸ்திரத்தன்மையைப் பேணுவதற்கும் எதிர்கால சவால்களை திறம்பட எதிர்கொள்வதற்கும் இதே போக்கில் இருப்பது அவசியம். இந்த மைல்கல்லை அடைவதற்கு அயராது உழைத்த குழுவை வழிநடத்தி, இலங்கையை வங்குரோத்து நிலையில் இருந்து வெளியே கொண்டு வரும் அதே வேளையில், வலுவான மற்றும் நெகிழ்ச்சியான பொருளாதார எதிர்காலத்தை உறுதி செய்ததில் நான் பெருமைப்படுகிறேன். இந்த மீட்புப் பயணத்தை வெற்றியடையச் செய்த அனைத்து பங்குதாரர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன் என்றார்.

# “தமிழ் அரசியல் கைதிகளை உடனடியாக விடுதலை செய்க”

மேலும் இதுதொடர்பில் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

தமிழ் அரசியல் கைதிகள் பலரும் விடுதலையின்றி நீண்டகாலமாக சிறையில் வாடுகின்றனர்.

குறிப்பாக கிளிநொச்சி, மருதநகரை சேர்ந்த ஆனந்தசுதாகர் என்பவர் கடந்த 2008ஆம் ஆண்டு பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இரண்டு பிள்ளைகளின் தந்தையான ஆனந்தசுதாகர் ஆயுள் தண்டனை கைதியாக கொழும்பு மகசீன் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.

இவரது மனைவி கடந்த 2018இல் உயிரிழந்தார். இந்நிலையில், இறுதிக்கிரியைக்கு கடும்பாதுகாப்புக்கு மத்தியில் சிறைச்சாலை அதிகாரிகளால் அழைத்து வரப்பட்டார்.

இறுதிக்கிரியையினை முடித்துக்கொண்டு சிறைச்சாலை பேருந்தில் ஆனந்தசுதாகர் ஏறச்சென்றவேளை அவரது பிள்ளை தந்தையின் கையைப் பிடித்து தானும் சிறைச்சாலை பேருந்தில் ஏறிய சம்பவம் அனைவரது மனங்களையும் கலங்கவைத்தது.

நீதிஅமைச்சரே, நீதியைத்தாருங்கள். அவரோடு சேர்ந்து சிறையில் அரசியல் கைதிகளாக உள்ளவர்களுக்கும் விடுதலை தாருங்கள். என தெரிவித்துள்ளார்.

## “உடனடி தீர்வு வேண்டும்”

அதிகளவிலான ஊழியர்கள் வேலையிழந்துள்ளதுடன், பொருளாதாரம் பாதிக்கப்பட்டுள்ளது. அத்துடன், வெளிநாட்டு முதலீட்டாளர்களும் நாட்டிற்கு வர முடியாத நிலை உருவாகியுள்ளது.இந்த நெருக்கடிக்கு உடனடி தீர்வு காணப்பட வேண்டும். இதனால் அழுத்தத்திற்கு உள்ளாவது ஜனாதிபதியோ, பிரதமரோ, அல்லது அமைச்சர்களோ அல்ல, சாதாரண மக்களே இந்த பிரச்சினையை எதிர்நோக்கியுள்ளனர்.

எனவே, தற்போது நாடு எதிர்நோக்கியுள்ள எரிபொருள் பிரச்சினை தொடர்பில் விநியோகஸ்தர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி, உடனடியாக தீர்வுகளை வழங்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு என்றார்.

# “ஜனாதிபதி பேசாமல் இருப்பது ஏன்?”

அப்படியிருக்கும் போது, அரசு இவ்விடயத்தில் மௌனம் காப்பது பிரச்சினைக்குரியது என ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி. அஜித் பி பெரேரா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் சனிக்கிழமை (01) இடம்பெற்ற பட்ஜெட் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அங்கு அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

அரசாங்கத்தின் கொள்கையின் பிரகாரமும் எமது கொள்கையும் புதிய அரசியலமைப்பு தயாரிக்கப்பட வேண்டும் என்பதாகும். அதனால் அரசாங்கம் தெரிவித்துள்ளதன் பிரகாரம் புதிய அரசியலமைப்பு தயாரிக்கும் பொறுப்பு நீதி அமைச்சருக்கே இருக்கிறது.

அதனை மேற்கொண்டு அனுமதித்துக்கொள்வதற்கான ஆதரவு அரசாங்கத்திடம் இருக்கிறது. அதேநேரம் எதிர்க்கட்சியில் இருக்கும் பெரும்பாலானவர்கள் புதிய அரசியலமைப்புக்கு ஆதரவளிக்க தயாராக இருக்கின்றனர்.

அதேநேரம் புதிய அரசியலமைப்பை ஏற்படுத்தி தற்போதுள்ள அரசியல் கலாசாரத்தை மாற்றியமைக்க சிறந்த அரசியல் சூழல் தற்போது இருக்கிறது. அதனால் அரசாங்கத்தின் புதிய அரசியல் அமைப்பு திட்ட வழிகாட்டல் வரைபு என்ன ? என நீதி அமைச்சரை கேட்கிறேன். புதிய அரசியலமைப்பு தொடர்பில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இரண்டுபேர் ஜனாதிபதியிடம் இந்த சபையில் கேட்டபோதும் அதற்கு ஜனாதிபதி பதிலளிக்கவில்லை.

அதேநேரம் ஜனாதிபதி நாட்டில் பல முக்கிய நிகழ்வுகளில் உரையாற்றி இருக்கிறார். இதன்போது அதிகமான பிரச்சினைகள் தொடர்பில் பேசி இருந்தார். ஆனால் அனைத்து பிரச்சினைகளுக்கும் தீர்வாக காணப்படும் புதிய அரசியலமைப்பு தொடர்பில் ஜனாதிபதி எதுவும் கதைப்பதில்லை. ஆனால் அரசாங்கம் அதிகாரத்துக்கு வரும்போது மக்களுக்கு தெரிவித்த பிரதான விடயங்களில் புதிய அரசியல் அமைப்பும் ஒன்றாகும்.

இதேவேளை, நிதி தொடர்பான வழக்குகள் கொழும்பு நீதிமன்றங்களில் குவிந்து காணப்படுவதால் அது தொடர்பான வழக்கு விசாரணைகளும் தாமதமாகும் நிலை ஏற்படுகிறது.

அதனால், சட்டத்தில் திருத்தம் மேற்கொண்டு நாட்டின் ஏனைய பிரதேசங்களிலும் நிதி தொடர்பான வழக்குகளை தொடுப்பதற்கு முடியுமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றார்.

# “தேயிலைத் தொழிலில் மாற்றம் அவசியம்”

தோட்ட உரிமையாளர்கள் சங்கத்தின் ஊடக செய்தித் தொடர்பாளருமான கலாநிதி ரொஷான் ராஜதுரை தெரிவித்தார்.

நானுஓயா, ரதெல்ல மைதானத்தில் தோட்ட நிறுவனத்தால் சனிக்கிழமை (01) நடத்தப்பட்ட சிறந்த தேயிலை கொழுந்து பறிக்கும் போட்டிக்குப் பிறகு ஊடகங்களுக்குக் கருத்துரைக்கும் போதே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் அவர் தெரிவித்துள்ளதாவது, நாளொன்றுக்கு 8 மணி நேரம் தேயிலை கொழுந்துகளைப் பறிப்பதன் மூலம் கிடைக்கும் சம்பளத்தை விட, உற்பத்தித்திறனை அடிப்படையாகக் கொண்டு தோட்ட உரிமையாளர்கள் சங்கத்தால் அரசாங்கத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட திட்டத்தைச் செயல்படுத்துவதன் மூலம், ஒரு தோட்டத் தொழிலாளி ஒரு நாளைக்கு சில மணி நேரம் தேயிலை கொழுந்துகளைப் பறிப்பதன் மூலம் தற்போதைய சம்பளத்தை விட அதிக சம்பளத்தைப் பெற முடியும்.

அந்த முன்மொழிவின்படி, தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை அதிகரிப்பது குறித்து ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க தனது கருத்துக்களைத் தெரிவித்திருப்பதாகவும், அந்த முன்மொழிவைச் செயல்படுத்தாமல் தேயிலைத் தோட்ட நிறுவனங்கள் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை மேலும் அதிகரிக்க முடியாது.உலக சந்தையில் இலங்கை தேயிலைக்குக் கிடைக்கும் விலையை விட, தோட்ட நிறுவனங்கள் தற்போது தோட்டத் தொழிலாளர்களுக்கு ரூ.100 அதிகமாக சம்பளம் வழங்கி வருவதாகவும், உற்பத்தித்திறனின் அடிப்படையில் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளத்தை அதிகரிக்கும் திட்டம், நாட்டில் தேயிலைத் தொழிலை மேலும் பராமரிக்கும் நோக்கில் அனைவரின் கருத்துக்களையும் கருத்தில் கொண்டு தயாரிக்கப்பட்ட ஒரு திட்டமாகும் என்றார்.

# பொருளாதார ஒப்பந்தங்கள்

இருநாடுகளுக்கு இடையிலான பொருளாதார உறவுகளை வலுப்படுத்துவது குறித்து கலந்துரையாடியுள்ளார். ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 58ஆவது அமர்வின் பக்க நிகழ்வாக இடம்பெற்ற சந்திப்பின் போது, ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவின் ஜப்பான் விஜயம் குறித்தும் பேசப்பட்டுள்ளது.

சுதந்திரமான மற்றும் திறந்த இந்தோ-பசிபிக் இலக்கை அடைவதில் ஜப்பானுக்கு ஒரு முக்கிய பங்காளியாக இலங்கை உள்ளது என்றும், பிராந்தியம் முழுவதும் ஸ்திரத்தன்மை மற்றும் செழிப்பை அடைய இலங்கையுடன் தொடர்ந்து இணைந்து பணியாற்ற ஜப்பான் விரும்புவதாக இதன்போது வெளியுறவுத் துறைக்கான பாராளுமன்ற துணை அமைச்சர் இகுய்னா அகிகோ குறிப்பிட்டிருந்தார்.

இலங்கை மக்களைக் கருத்தில் கொண்டு ஜப்பான் தொடர்ந்து ஒத்துழைப்பை வழங்கும் என்றும், நிறுத்தப்பட்ட பல திட்டங்களை மீண்டும் இலங்கையில் ஆரம்பிக்க உள்ளோம்.

இலங்கை சர்வதேச நாணய நிதியத்துடன் ஒப்புக்கொண்ட சீர்திருத்தங்கள் நிலையான முறையில் செயல்படுத்தப்படுவதையும், முழுமையான பொருளாதார வளர்ச்சிக்கான பாதையில் நிலையான முன்னேற்றத்தையும் ஜப்பான் ஆவலுடன் எதிர்நோக்குவதாகவும் துணை அமைச்சர் இகுய்னா அகிகோ கூறியுள்ளார்.

இதற்கு பதிலளித்த வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேராத், ஜப்பான் இலங்கைக்கு நீண்டகாலமாக அளித்து வரும் ஆதரவிற்கும், அரசியல், பொருளாதாரம் மற்றும் மக்களிடையேயான பரிமாற்றங்கள் உள்ளிட்ட பல்வேறு துறைகளின் ஒத்துழைப்புகளுக்கும் நன்றி தெரிவித்துள்ளார்.

எனினும், ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவின் ஜப்பான் விஜயத்திற்கான திகதி இவ்வாரம் தீர்மானிக்கப்பட உள்ளதுடன், அதனை தொடர்ந்து ஐரோப்பாவிற்கான விஜயத்தில் ஜனாதிபதி பங்கேற்க உள்ளமை குறிப்பிடத்தக்கது.

# “த.தே.கவுடன் இணைந்து தேர்தலில் போட்டியிட தீர்மானம்”

கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக இலங்கை தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளரும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

அத்துடன், உள்ளூராட்சி மன்ற தேர்தல் தொடர்பாக இலங்கை தமிழரசுக் கட்சியின் சகல மாவட்ட கிளைகளையும் சந்தித்து வரும் எம்.ஏ.சுமந்திரன் , ஞாயிற்றுக்கிழமை(2) மன்னார் மாவட்ட கிளையுடன் மன்னாரில் உள்ள அலுவலகத்தில் விசேட கலந்துரையாடல் ஒன்றை முன்னெடுத்தார்.இது தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,,,

மன்னாரில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தலைமையில் குறித்த கூட்டம் இடம்பெற்றது. கட்சியின் சகல அங்கத்தவர்களும் குறித்த கூட்டத்தில் பங்கு பற்றி இருந்தனர்.மன்னார் மாவட்டத்தில் போட்டியிடவுள்ள அனைத்து உள்ளூராட்சி சபைகள் குறித்து ஆராய்ந்துள்ளதோடு, குறித்த சபைகளில் வேட்பாளர்களை நியமிப்பது குறித்தும் குறிப்பாக வட்டார வேட்பாளர்கள், இரண்டாவது பட்டியல் வேட்பாளர்கள் நியமிப்பது குறித்து ஆராயப்பட்டுள்ளது. ஏற்கெனவே நியமிக்கப்பட்ட வேட்பாளர்களில் நாட்டில் இல்லாதவர்கள் மற்றும் வேறு கட்சியில் இணைந்தவர்கள் குறித்தும் முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்தும் ஆராயப்பட்டது. மிகவும் செல்வாக்கு உள்ளவர்களை வட்டார வேட்பாளராக நியமிப்பது என ஏற்கெனவே கட்சி எடுத்த தீர்மானத்துடன் மன்னார் மாவட்ட கிளையுடம் இனங்கியுள்ளனர்.ஏனைய தமிழ் தேசியக் கட்சியுடனும் எவ்விதத்தில் இத்தேர்தலை அணுக முடியும் என்றும்,தேர்தலின் பின்னர் வெவ்வேறு அணிகளாக போட்டியிட்டாலும்,ஆட்சி நிர்வாகங்களை அமைக்கின்ற போது சேர்ந்து அமைக்கக்கூடிய வகையில்,தேர்தலுக்கு முன்னர் ஒரு நிலைப்பாட்டை ஏற்படுத்தும் வகையில் கலந்துரையாடல்களை மேற்கொண்டுள்ளோம்.மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு சபைகளுக்கும் ஏற்ற வகையில் தீர்மானங்கள் எடுக்கப்படும். அனைவரினதும் கருத்துக்கள் உள்வாங்கப்பட்டுள்ள தாக அவர் மேலும் தெரிவித்தார்.மேலும் பல்வேறு விடையங்கள் குறித்தும் தனது கருத்துக்களை வெளியிட்டார்.

# “இந்த கேள்விகளுக்காவது...

ஜனாதிபதியிடமும் பலமுறை கேள்வியெழுப்பினேன். ஆனால் இதுவரை அதற்கு உறுதியான பதில் கிடைக்கவில்லை.

இந்த நாட்டில் பல படுகொலைகள் இடம்பெற்றுள்ளன. அவற்றில் ஊடகவியலாளர் நிமலராஜன் படுகொலை (2009), திருகோணமலை ஐந்து மாணவர் படுகொலை (2006), 11 தமிழ் மாணவர்கள் கடத்தல் - படுகொலை , கீத் நொயார் படுகொலை , லசந்த விக்கிரமதுங்க படுகொலை (2009), பிரகீத் ஹெக்னலிகொட ( 2010) உள்ளிட்டவை பிரதானவையாக கருதப்படுகின்றன.

லசந்த விக்கிரமதுங்க படுகொலை தொடர்பில் கடந்த மாதமளவில் பரவலாக பேசப்பட்டது. சந்தேக நபர்களை விடுவிப்பதாக சட்ட மா அதிபர் எடுத்த தீர்மானம் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளது. ஆகவே, இவ்விடயத்தில் ஏதேனுமாரு மர்மம் உள்ளது. ஏனைய படுகொலைகள் தொடர்பில் அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன,?இலங்கை தமிழ்ச்சங்கம் 2004 முதல் 2009 ஆம் ஆண்டு முதல் படுகொலை செய்யப்பட்ட 34 தமிழ், சிங்களம் மற்றும் முஸ்லிம் ஊடகவியலாளர்களின் பெயர் பட்டியலை வெளியிட்டுள்ளது. அவர்களில் பெரும்பாலானோர் தமிழர்கள்.

ஐயாதுரை நடேசன், கந்தசுவாமி பாலனந்தராஜா, லங்கா ஜயசுந்தர, தர்மரட்னம் சிவராம், கண்ணமுத்து அரசகுமார், செல்வராஜா, செல்வரட்ணம், கிருஸ்ணபிள்ளை, பலீல், நவரட்ணம், சுகிர்தராஜன், கனநாதன், ஜோஜ், , சயதாஸ், ரஞ்சித் குமார், லக்மால் டி சில்வா, மனோஜன் ராஜ், விஸ்வநாத், பாஸ்கரன், விமலராஜன், ரவிசந்திரன் பாலச்சந்திரன், சந்திரபோஸ் சுதாகர், செல்வராஜா ரவிவர்மன், நிலக்சன், சிதில்ராஜன், நிமலராஜன், சுபாஜினி, லிம்பியோ, தர்மலிங்கம், தேவகுமார், ரஸ்மி மொஹமட், லந்த விக்கிரமதுங்க, புண்ணியமூர்த்தி சத்தியமூர்த்தி மற்றுமு; சசிமதன் ஆகியோரே படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களில் பெரும்பானாலோர் தமிழ் பேசும் ஊடகவியலாளர்கள். கோட்டபய ராஜபக்ஷவின் அரசாங்கத்தில் அனைத்தும் மூடி மறைக்கப்பட்டன. மக்கள் சிறந்த ஆணையை வழங்கியுள்ளார்கள். அதனை சிறந்த முறையில் பயன்படுத்துங்கள். புதிய யாப்புருவாக்கம் தொடர்பில் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்காமல் ஜனாதிபதி தப்பித்துச் சென்றார். ஆகவே இந்த கேள்விகளுக்கேனும் ஜனாதிபதி பதிலளிக்க வேண்டும் என்றார்.



# விமானப்படையின் 74ஆவது நிறைவு

'வானின் பாதுகாவலர்கள்' என்று அழைக்கப்படுகின்ற இலங்கை விமானப்படை, தனது 74ஆவது ஆண்டு நிறைவை 2025 மார்ச் 02 திகதி அன்று இலங்கை விமானப்படை தலைமையகத்தில் தற்போதைய விமானப்படை தளபதி எயார் மார்ஷல் பந்து எதிரிசிங்கவின் தலைமையில் கொண்டாடியுள்ளது.

இலங்கை விமானப்படையின் வரலாறு 1951 மார்ச் 2 ஆம் திகதி ராயல் சிலோன் விமானப்படை நிறுவப்பட்டதன் மூலம் ஆரம்பமாகியது.

மேலும், இலங்கை சோசலிச நாடாக பிரகடனப்படுத்தப்பட்ட உடன், 1972 மே 22ஆம் திகதி இலங்கை விமானப்படை யாக மாற்றம் அடைந்தது. 'நாட்டைப் பாதுகாப்போம்' என்ற குறிக்கோளை மனதில் கொண்டு, இலங்கை விமானப்படை 74 ஆண்டுகளாகத் தாய்நாட்டிற்கான தனது பணியை முறையாக நிறைவேற்ற முடிந்தது.

தற்போதைய விமானப்படைத் தளபதி எயார் மார்ஷல் பந்து எதிரிசிங்க உட்பட மொத்தமாக 20 விமானப்படைத் தளபதிகளின் தலைமை மற்றும் வழிகாட்டுதலின் கீழ், இலங்கை விமானப்படை, 74 ஆண்டுகளாக இலங்கை மக்களைப் பாதுகாப்பதன் மூலம் தாய்நாட்டிற்கான தனது பணியை நிறைவேற்றியுள்ளது. மேலும் தாய் நாட்டுக்காகத் தனது மகத்தான பணியைத் தொடர்ந்து செய்துவர இலங்கை விமானப்படை எந்நேரமும் தயார் நிலையில் உள்ளது.






















# "அதானி வெளியேறுவது நாட்டின் முதலீட்டு வாய்ப்புகளுக்கு பின்னடைவு"

அதானி கிரீன் எனர்ஜி (Adani Green Energy) இலங்கையிலிருந்து வெளியேறுவது தொடர்பாக அரசாங்கத்தை கடுமையாக விமர்சித்துள்ள தமிழ் முற்போக்குக் கூட்டணி (TPA) தலைவரும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன், இது நாட்டின் முதலீட்டு வாய்ப்புகளுக்கு பெரும் பின்னடைவு என்று கூறியுள்ளார்.

பாராளுமன்றத்தில் சனிக்கிழமை (01) இடம்பெற்ற பட்ஜெட் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றுகையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும், அதானி இலங்கை திட்டம் உள்ளூர் மின் கட்டமைப்புக்கு மின்சாரத்தை உருவாக்குவது மட்டுமல்ல, இந்தியாவிற்கு மின்சாரத்தை ஏற்றுமதி செய்வதும் ஆகும் என்று வாதிட்டுள்ளார்.

அரசாங்கம் நிலைமையை முறையாகக் கையாளத் தவறியது சர்வதேச முதலீட்டாளர்களுக்கு எதிர்மறையான சமிக்ஞைகளை அனுப்பியுள்ளது என்று அவர் வலியுறுத்தியுள்ளார்.



"நீங்கள் அதானியை நிராகரிக்கவில்லை. உண்மை என்னவென்றால், அதானி தான் உங்களை நிராகரித்தது," என்றதுடன், அரசாங்கம் திட்டத்தின் மூலோபாய முக்கியத்துவத்தைத் தவறாகப் புரிந்துகொண்டுள்ளது என்பதையும் கூட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்கவின் சமீபத்திய ஐக்கிய அரபு இராச்சிய விஜயத்தின் விளைவையும் கணேசன் கேள்வி எழுப்பினார், ஏதேனும் உறுதியான முதலீட்டு ஒப்பந்தங்கள் உறுதி செய்யப்பட்டதா என்று கேட்டுள்ளார்.

மத்திய கிழக்கு அல்லது ஐரோப்பாவைச் சேர்ந்த முதலீட்டாளர்கள் இலங்கையைக் கருத்தில் கொள்ளும்போது இந்தியாவைத் தவிர்த்துச் செல்ல மாட்டார்கள் என்பதால், இந்தியப் பங்குதாரர்களுடன் கூட்டாக மட்டுமே வெளிநாட்டு நேரடி முதலீடுகள் (FDI) இலங்கைக்குள் வரும் என்று அவர் எச்சரித்துள்ளார்.

சமூக ஊடகங்களில் கணேசன் தனது கருத்துகளை மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

"இந்தியாவுடனான கிரிட் இணைப்பு மூலம் சாத்தியமான எரிசக்தி ஏற்றுமதி இலங்கைக்கு வருவாயைக் கொண்டு வந்திருக்கும். எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு இதைப் புரிந்து கொள்ள நீங்கள் தவறிவிட்டீர்கள். அதானியின் வெளியேற்றம் இலங்கையைப் பார்க்கும் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்குத் தவறான சமிக்ஞைகளை அனுப்பியுள்ளது" என்றார்.

## பேருந்தும் லொறியும் மோதி விபத்து; 33 பேர் படுகாயம்



யாத்திரிகர் குழுவொன்றை ஏற்றிச் சென்ற பேருந்தொன்றும் லொறி ஒன்றும் திருகோணமலை-மட்டக்களப்பு பிரதான வீதியின் வைத்து நேருக்கு நேர் மோதியதில் 32 பயணிகளுடன் லொறி சாரதியும் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட சம்பவம் சனிக்கிழமை (01) அன்று இடம்பெற்றுள்ளது.

யாத்திரிகர்களை ஏற்றிச் சென்ற பேருந்து வெயங்கொடையிலிருந்து திருகோணமலை சேருநுவர நோக்கிப் பயணித்த நிலையில் இந்த விபத்து நிகழ்ந்துள்ளது.

விபத்தின் போது, பேருந்தில் 52 பேர் பயணித்துக் கொண்டிருந்ததாகவும் காயமடைந்தவர்களில் பேருந்தின் சாரதி அடங்குவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்துக்குள்ளாகி மூதூர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்த இருவரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாகவும், அவர்கள் திருகோணமலை பொது மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளதாகவும் மூதூர் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

## மாட்டை திருடி அறுக்க முயன்றவர் தப்பியோட்டம்

■ எச்.எம்.எம்.பர்ஸான்

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிறைந்துறைச்சேனைப் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை (2) அன்று மாடொன்றைதிருடி அதை வீடொன்றில் வைத்து வெட்டுவதற்கு முயற்சித்த ஒருவர் தப்பியோடியுள்ளார்.

களவாடிய மாட்டை இரகசியமான முறையில் வீடொன்றில் வைத்து வெட்டுவதற்கு தயாரான நிலையில், பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கமைய குறித்த வீட்டை பொலிஸார் சுற்றிவளைத்த போது, சந்தேக நபர் மதில் மேலாகப் பாய்ந்து தப்பிச் சென்றுள்ளதுடன், மாடு வெட்டுவதற்கு உடந்தையாக இருந்ததாக



கூறப்படும் இருவரை வாழைச்சேனை பொலிஸார் விசாரணைக்காக தடுத்து வைத்துள்ளனர்.

மாடு வாழைச்சேனை பொலிஸாரின் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளதுடன், இது தொடர்பான மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

## பேஸ்புக் களியாட்டம்; பொலிஸ் அதிகாரி உட்பட அறுவர் கைது

மஹாவெல பகுதியில் உள்ள ஹோட்டலொன்றில் நடைபெற்ற பேஸ்புக் களியாட்டமொன்றைச் சுற்றி வளைத்த போது போதைப்பொருள் வைத்திருந்த பொலிஸ் அதிகாரி ஒருவர் உட்பட 6 பேர் சனிக்கிழமை (1) அன்று கைது செய்யப்பட்டதாக மஹாவெல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் 25 முதல் 35 வயதுக்குட்பட்ட மாத்தளை, மஹாவெல, கட்டுகஸ்தொட, கண்டி மற்றும் ரத்தோட்டை பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த பேஸ்புக் களியாட்டத்திற்கு நுழைய ஒருவரிடமிருந்து சுமார் 3,000 ரூபாய் கட்டணம் வசூலிக்கப்பட்டதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இந்த நிகழ்வை குறித்த பொலிஸ்



அதிகாரி ஏற்பாடு செய்திருந்ததாகத் தெரியவந்துள்ளதுடன், மேலும், அவரது உடைமையில் இருந்து கஞ்சாவுடன் கலந்த போதைப்பொருள் 22 கிராம், ஹாஷ் 620 மில்லிகிராம் மற்றும் 660 மில்லி கிராம் போதைக் குளிசைகள் மீட்கப்பட்டுள்ளது.

40க்கும் மேற்பட்டோர் இதில் கலந்து கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளதுடன், இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## முறைப்பாடுகளை தெரிவிக்க QR அறிமுகம்

■ நூருல் ஹுதா உமர்

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பொதுமக்கள் தங்களது சுகாதார சேவைகள் குறித்த முறைப்பாடுகளை தெரிவிப்பதற்காக QR குறியீட்டு முறைமை அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளது. கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் சகீலா இஸ்ஸடீனின் ஆலோசனைக்கு அமைவாக சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் ஜே. மதன் இதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளார்.

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட பொது இடங்கள் மற்றும் பொதுமக்கள் ஒன்று கூடும் இடங்களில் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்திற்கான இந்த QR குறியீட்டு ஸ்டிக்கர் அறிமுகம் செய்து வைக்கும் நிகழ்வு சனிக்கிழமை (01) அன்று சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில்



இடம்பெற்றது.

இந்நிகழ்வில் சாய்ந்தமருது மாவட்ட வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரியும் சாய்ந்தமருது ஜும்ஆ பெரிய பள்ளி வாசல் தலைவருமான டாக்டர் சனூஸ் காரியப்பர் பிரதம அதிதியாக கலந்து கொண்டு இதனை அங்குரார்ப்பணம் செய்து வைத்தார்.

மேலும் இந்நிகழ்வில் சாய்ந்தமருது ஜம்இய்யத்துல் உலமா சபையின் தலைவரும், சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தின் பொதுச் சுகாதார பரிசோதகர்களும் மற்றும் சாய்ந்தமருது பிரதேசத்திற்குட்பட்ட உணவு கையாளும் நிறுவன தலைவர்களும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

## கொழும்பை வந்தடைந்த போர்க்கப்பல்

ஜப்பான் கடல்சார் சுய பாதுகாப்புப் படையின் 'ASAHI' என்ற கப்பல், விநியோகம் மற்றும் சேவைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக சனிக்கிழமை (01) அன்று கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது.

'ASAHI', ஒரு அழிக்கும் கப்பல் வகை, 151 மீட்டர் நீளம் கொண்டது மற்றும் மொத்தம் 202 கப்பல்களைக் கொண்டுள்ளது.

நாட்டில் தங்கியிருக்கும் போது, போர்க் கப்பல் அதன் சொந்த துறைமுகமான



கொழும்பின் கவர்ச்சிகரமான சுற்றுலாத் தலங்களையும் பார்வையிட திட்டமிடப்பட்டுள்ளது.

அதன் விநியோகம் மற்றும் சேவைத் தேவைகளைப் பூர்த்தி செய்த பிறகு நாளை 03ஆம் திகதி இலங்கையை விட்டு வெளியேறும் என்று கடற்படை தெரிவித்துள்ளது.

## சுதுமலையில் இருவர் கைது

யாழ்ப்பாணம் சுதுமலையில் சுமார் 1,600 போதை மாத்திரைகளுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக மானிப்பாய் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மானிப்பாய் பொலிஸாருக்கு கிடைத்த புலனாய்வு தகவலுக்கமைய மானிப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜெயந்த குணதிலகவின் வழிகாட்டுதலில் சுதுமலை பகுதிக்கு விரைந்த பொலிஸார் மோட்டார் சைக்கிளில் பயணித்த, கொக்குவில் பகுதியைச் சேர்ந்த 21 மற்றும் 22 வயது மதிக்கத்தக்க இரண்டு இளைஞர்களை வழிமறித்துச் சோதனையிட்டுள்ளனர்.

இதன் போது இரு வகையான 1,600 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளது.

இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மானிப்பாய் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.கைது செய்யப்பட்ட சந்தேக நபர்களை மல்லாகம் நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.



# தொடுதிரை அலைபேசிகளால் சீரழியும் இளம் சமூகம்

படுக்கையில் கிடந்து மல்லாக்க புரள முடியாத குழந்தைகளின் கைகளிலும் தொடுதிரை அலைபேசிகள் கொடுக்கப்பட்டு அவர்களை அழ விடாமல் வைத்திருக்கும் சூட்சுமத்தைத் தாய்மார்கள் கண்டுபிடித்துள்ளனர். அந்தளவுக்கு அலைபேசியின் தாக்கம் அதிகரித்துள்ளது. அலைபேசிகளால் பல நன்மைகள் கிடைத்தாலும். ஒரு சிலர் தேவையில்லாத வலைக்குள் சிக்கிக்கொள்கின்றன.

ஒரு காலத்தில் அல்ல தற்போதும் அந்தரங்கம் மிக அந்தரங்கமாகவே பார்க்கப்படுகின்றது. எனினும், சமூக வலைத்தளங்களில் ஒருசிலரின் பதிவுகளை பார்த்தால், அந்தரங்கம் எல்லாமே நடுவீதிகளுக்கு இழுத்துவரப்பட்டுள்ளன. எவற்றையெல்லாம் பார்க்கக்கூடாதோ, அவற்றையெல்லாம் பார்க்கவேண்டிய கண்டுறாவியாகிவிட்டது.

தங்களுடைய பிள்ளைகள் வெளில் சென்று கூடாத நண்பர்களுடன் சேர்ந்தால் கெட்டுவிடுவார்கள் என்ற நிலைமை அப்பால். வீட்டுக்குள் இருந்தாலே கெட்டுவிடுவார்கள் என்பதாகிவிட்டது. ஏனெனில், அந்தளவுக்கு அலைபேசிக்கு அடிமையாகிவிட்டார்கள்.

ஏற்கெனவே குறிப்பிட்டதை போல, மிக நல்ல விடயங்களுக்கு அலைபேசியைப் பயன்படுத்துவதே சிறந்தது. தீயவற்றை ஒதுக்கிவைத்துவிட்டால், எல்லாமே நன்மையாக இருக்கும். சமூக வலைத்தளங்கள் ஊடாக நண்பர்களாகி, கர்ப்பிணியான சம்பவங்கள் ஒவ்வொரு நாளும் செய்திகளாக இடம்பிடிக்கின்றன. இவற்றுக்கெல்லாம் பாடசாலையில் கற்பிக்க வேண்டிய பாடங்களையும், மேலதிக வேலைகளையும் நிகழ்நிலையின் (ஒன்லைன்) ஊடாக அனுப்புவதுதான். பெற்றோர்களால் தங்களுடைய பிள்ளைகளைக் கவனிக்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது. ஏனெனில், மேலதிக பாடங்களை அலைபேசி ஊடாக அனுப்பிவைத்துள்ளனர் எனக் கூடிய அலைபேசியுடன் மூடிய அறைகளுக்குள் சென்றுவிடும் பல பிள்ளைகள், காதல் வலையில் சிக்கி கற்பை இழந்து கர்ப்பிணியாகி விடுகின்றனர்.

அல்லது தங்களுடைய நிர்வாண படங்களை அனுப்புவதன் மூலம், மறுபுறத்தில் போலியான அன்பு வலையை வீசியவர்கள், அப்பெண்ணை அச்சுறுத்தி கற்பை சூறையாடிவிடுகின்றனர். தனியாக மட்டுமன்றி தங்களுடைய நண்பர்களையும் அழைத்துச்சென்று கூட்டுப் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தி விடுகின்றனர்.

மாணவர்கள் மற்றொரு மாணவரைத் தொடர்ந்து தாக்கும் காணொளி தற்போது சமூக ஊடகங்களில் பரவி வருகிறது. இந்த நாட்டில் மாணவர் சமூகம் தெருக்களிலும் பாடசாலைகளிலும் தாக்கிக்கொள்கின்றனர். உலகின் ஒவ்வொரு நாட்டிலும் சிறார் வன்முறை உள்ளது. அது நம் நாட்டிலும் இருக்க வேண்டும் என்று நாங்கள் கூறவில்லை. இளமையில் வன்முறையில் ஈடுபடும் ஒருவர், போதுமான வயதை அடையும் போது பாதாள உலகத்திலிருந்து வெளிப்படுவார். அல்லது அவன் தன் சொந்த குடும்பத்திலேயே ஒரு அரக்கனாக மாறிவிடுவான். இந்த அசுரன் இரவில் குடித்து விட்டுக் கெட்ட வார்த்தைகளைப் பேச ஆரம்பிக்கிறான். உடல் ரீதியாகவோ அல்லது பாலியல் ரீதியாகவோ அல்லது இரண்டு விதமாகவோ மீண்டும் மீண்டும் துஷ்பிரயோகம் செய்யப்படுதல், குடும்பத்திற்குள் அல்லது சொந்த சமூகத்திற்குள் தொடர்ந்து வன்முறைக்கு ஆளாகுதல், தொடர்ந்து கேலி செய்யப்படுதல், மரபணு ரீதியாக வன்முறைக்கு ஆளாகுதல் தொலைக்காட்சி அல்லது சமூக ஊடகங்களில் காட்டப்படும் வன்முறைச் செயல்களைப் பார்ப்பதற்கு அடிமையாகுதல், போதைப்பொருள் அல்லது மதுவுக்கு அடிமையாகுதல் இளம் வயதிலேயே ஒருவரை வன்முறையாளராக மாற்றிவிடுகின்றது. ஆகையால், தொடுதிரை அலைபேசிகள் தொடர்பில் அவதானமாக இருக்கவேண்டும்.




தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136
Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

பகைவன் என நீங்கள் கருதுபவர்களிடம் இருக்கும் நல்ல குணங்களைத் தேடி அறிவீர்களாக! முழுமையாக நீங்கள் வாழுகின்றீர்களா என உங்களை நீங்களே கேட்பீர்களாக!

சில நிகழ்வுகள் எதிர்பாராத விதமாகச் சம்பவித்துவிடுகின்றன. தப்பான அபிப்பிராயங்களால், நட்பு அடைபட்டுவிடுகின்றது. சிலசமயங்களில் உங்களால் ஒதுக்கப்பட்டவர்கள் உங்களை நினைத்து வருந்தலாம்.

சில கர்வ எண்ணங்களால் உறவுகள் பாதிக்கப்படுகின்றன. வாழும் காலத்தில் நெஞ்சத்தில் கலவரம், தவறான எண்ணங்கள், கருத்துகள் உருவாதலாகாது.

வாழ்வின் அர்த்தம் யாவரையும் அரவணைத்துச் செல்வதிலேயே தங்கியுள்ளது. வெறுத்தலை விடுத்துச் சும்மா இருப்பது நல்லது. தொடரும் வெறுப்பை மறந்துவிடுக. அதுவே உங்கள் இதயத்தில் புது ஒளியைப் பாய்ச்சும்.

தகாத பொய்களைச் சொல்லி, எவரையும் பிரித்தலாகாது. சமூகம் இணைந்தால் பாரிய பலம் உண்டாகும். விலகி வாழ்ந்தால் எதையும் சாதிக்க முடியாது.

நன்றி–பருத்தியூர் பால.வயிரவநாதன்

# மாற்றம் ஏதுமில்லை

**லக்ஸ்மன்**

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இருந்து அமெரிக்கா விலகியுள்ள சூழ்நிலையில், பேரவையின் கூட்டத்தொடர் கடந்த 24ஆம் திகதி ஜெனிவாவில் ஆரம்பமாகி ஏப்ரல் 07ஆம் திகதிவரை நடைபெறுகிறது. அமர்வில் பங்குபற்ற 23ஆம் திகதி நாட்டிலிருந்து புறப்பட்ட இராஜதந்திரக்குழுவின் தலைவர் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் 25ஆம் திகதி உரையாற்றினார். இலங்கை தொடர்பான அறிக்கை மார்ச் 03ஆம் திகதியாகிய இன்றைய தினம் வெளிவரவிருக்கிறது.

ஜெனிவாவில் இடம்பெறும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 58ஆவது கூட்டத்தொடரில் இலங்கையின் நிலைப்பாடு தொடர்பில் உரையாற்றிய வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், ஏற்கெனவே நிறுவப்பட்ட உள்நாட்டுச் செயல்முறைகள் சுயாதீனமான மற்றும் நம்பகமான முறையில் தங்கள் பணிகள் தொடரும், காணாமல் போனோர் அலுவலகம், இழப்பீடுகளுக்கான அலுவலகம், தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகம் போன்ற உள்நாட்டு நிறுவனங்கள் வலுப்படுத்தப்படும் என்று தெரிவித்திருக்கிறார். இதன் அர்த்தம் அரசாங்கம் மேற்கொண்டு வந்த உள்நாட்டு (உள்ளக) பொறிமுறைச் செயற்பாடு தொடரும் என்பதாகும்.

காணாமல் போனோர் அலுவலகம், இழப்பீடுகளுக்கான அலுவலகம், தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான அலுவலகம் போன்ற நாட்டிற்குள் நடைபெறுகின்ற எந்தவொரு விடயத்திலும் நம்பிக்கையற்று சர்வதேச நீதிப் பொறிமுறை ஒன்றே தேவை என்றவகையில், நடைபெற்றுவருகின்ற போராட்டங்கள், முயற்சிகளை மேலும் வலுவிழக்கச் செய்வதாக விஜித ஹேரத்தின் இந்தக் கருத்துக்கள் அமைந்திருக்கின்றன.

அனைத்து இலங்கையர்களின் நம்பிக்கையைப் பெறும் ஒரு செயல்முறையை உறுதி செய்வதற்காக, உண்மை மற்றும் நல்லிணக்க கட்டமைப்பின் வரையறைகள் தொடர்பில் உரிய பிரிவினருடன் விவாதிக்கப்படும் என்ற அமைச்சர் விஜித ஹேரத்தின் இந்த அறிவிப்பானது, இலங்கையின் அரசியலமைப்பு கட்டமைப்பிற்குள் உள்நாட்டு பொறிமுறைகளை நம்பகமானதாகவும், உறுதியானதாகவும் மாற்றுவதற்கானதாக இருக்கிறது. அதே நேரத்தில், கடந்த கால ஆட்சியாளர்கள் போலவே நாட்டிற்குள் நடைபெற்று வருவது இனப் பிரச்சினை சார்ந்ததல்ல என்பதான கோதாவும் வெளிப்பட்டிருக்கிறது. அமைச்சர் விஜித ஹேரத்தின் இலங்கையில் உள்ள சமூகங்களுக்குள் பதற்றங்களை ஏற்படுத்தும் வன்முறைச் செயல்கள் தொடர்பில் விசாரிப்பதற்காக உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவுக்கு அதிகாரம் அளிக்கப்படும் என்ற கருத்து நாட்டில் புரையோடிப் போயிருக்கின்ற தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை வெறுமனே ஒரு வன்முறை என்றவகையில் அர்த்தப்படுத்தியிருப்பதாகவும் பார்க்கலாம்.

அந்தவகையில், மனித உரிமை பேரவையின் அமர்வில் சமர்ப்பிக்கப்படும் எந்தவொரு தீர்மானத்தையும் இலங்கை அரசாங்கம் எதிர்க்கும் என்பது தெளிவுபடுத்தப்பட்டிருக்கிறது. இது கடந்த ஒக்டோபர் மாதம் 7ஆம் திகதிய அமைச்சரவை கூட்டத்தில் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் சமர்ப்பிக்கப்பட்ட 51/1 தீர்மானத்தின் நகல் வடிவை நிராகரித்தல் என்பதன் முடிவாக இருக்கிறது.

இந்த இடத்தில்தான், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் நிரந்தர உறுப்புரிமைகளை கொண்ட சர்வதேச அமைப்புகளின் கருத்துப்படி ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இருந்து அமெரிக்கா விலகியுள்ளமையானது இலங்கை தொடர்பான செயன்முறையை முன்னெடுத்துச் செல்வதில் பின்னடைவுகள் ஏற்படுத்தக்கூடும் என்ற வகையிலான கருத்துக்களை வெளியிட்டிருக்கின்றன. பிரித்தானியாவை வைத்துக் கொண்டு நம்பிக்கைகள் வெளியிடப்பட்டிருந்தாலும் இது தமிழர்களுக்குச் சாத்தியமற்றதாகவே பார்க்கப்படுகிறது.

அமெரிக்கா பேரவையிலிருந்து விலகியுள்ளதனால், நிறைவேற்றப்பட்ட 15/1 நகல் வடிவையும், இலங்கைக்கு எதிராக 2014இல் அந்நாட்டின் தலைமையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தையும் வலுவிழக்கச் செய்யவும் இலங்கை அரசாங்கம் கோரிக்கையை ஜெனிவாவில் முன்வைக்கலாம். இது தொடர்பில் தனது நட்பு நாடுகளான சீனா, ரஷ்யா, பாக்கிஸ்தான் மற்றும் கியூபா போன்ற நாடுகளின் ஆதரவையும் இலங்கை கோரும்.

இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தும் நோக்கில் 2015இல் நிறைவேற்றப்பட்ட 30/1 தீர்மானத்தின் உண்மை, நீதி, இழப்பீடு மற்றும் மீள் நிகழாமையை உறுதி செய்தல் ஆகியவற்றில் இதுவரை முன்னேற்றம் ஏதும் ஏற்பட்டுவிடவில்லை. உண்மையைக் கண்டறிந்தபின் நீதிப்பொறிமுறைக்கு உட்படுத்தப்பட வேண்டும், காணாமல் போனோருக்கான அலுவலகம் ஆரம்பிக்கப்பட்டு எட்டு வருடங்கள் ஆகின்ற போதும், ஒரு உண்மையேனும் கண்டறியப்படவில்லை என்று தொடர்ந்தும் போராட்டத்தை நடத்திவரும் தாய்மாரின் கேள்வியாக இருக்கிறது.

நாட்டில் போர் ஓய்வுக்கு வந்து 16 ஆண்டுகளாகியும், காணாமல் போனோருக்கான நீதியைக் கோரும் போராட்டத்தில் ஈடுபட்ட 250க்கும் மேற்பட்ட பெற்றோர்கள் உயிரிழந்த பிறகும், நீதி நிலைநாட்டப்படவில்லை. இத்தனை ஆண்டுகள் கடந்தும் இலங்கை அரசாங்கம் உள்ளகப் பொறிமுறையை நடைமுறைப்படுத்தவுள்ளதாக வெளிப்படுத்துவதும், அதனை ஐ.நா.வும், சர்வதேச நாடுகளும் நம்பிச் செயற்படுவதுமே நடைபெற்று வருகிறது.

இளைக்கப்பட்ட அநீதிக்கான நீதி கிடைக்கும், தங்களுக்கான அரசியல் தீர்வு கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் போராட்டங்களையும், ஆர்ப்பாட்டங்களையும், சந்திப்புகளையும், அறிக்கை சமர்ப்பிப்புகளையும் முன்னெடுத்துவரும் தமிழ் மக்கள் தமக்கான நீதி ஒவ்வொரு வருடத்தினது மார்ச் மாதத்திலும், செப்டெம்பர் மாதத்திலும் கிடைத்து விடும் என்றே நம்புகின்றனர்.

இருந்தாலும், இலங்கையில் மூன்று தசாப்தங்களுக்கு மேலாக நீடித்த உள்நாட்டு யுத்தம் மௌனிக்கப்பட்டு 16 வருடங்களாகிய பின்னும் ஏன் இனப் பிரச்சினை ஒன்று ஆரம்பமானது என்பது தொடர்பிலான கேள்விக்கே பேரினவாதத் தரப்பினரிடம் சரியான பதில் இல்லை என்ற நிலை காணப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் சபையில் இலங்கைக்கு எதிராக 2015ஆம் ஆண்டு முதல் கொண்டுவரப்பட்ட தீர்மானங்கள் இலங்கையில் நடந்து முடிந்த உள்நாட்டு யுத்தத்தின்போது இடம்பெற்றதாகக் கூறப்படும் மனித உரிமை மீறல்கள், படுகொலைகள் தொடர்பில் எந்தவிதமான தீர்மானகரமான விடயத்தையும் நிகழ்த்தவில்லை.

போர்க் குற்றவாளிகளை எமது அரசாங்கம் தண்டிக்காது என்று ஜனாதிபதித் தேர்தல் அறிவிக்கப்பட்டபோதே வெளிப்படையாக அறிவித்தவர் தற்போதைய ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க. அத்துடன், விஜித ஹேரத் எமது அரசாங்கம் காணி, பொலிஸ் அதிகாரங்களைப் பகிராது என்றுரைத்திருந்தார். ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா அரசியலமைப்பின் 13ஆவது திருத்தமும் அதிகாரப் பகிர்வும் தமிழ் மக்களுக்கு அவசியமில்லை. தங்களுடைய அரசியல் இருப்பைத் தக்க வைத்துக் கொள்வதற்காக தமிழ் அரசியல்வாதிகள் இதனைப் பயன்படுத்தி வருகின்றார்கள் என்று தெரிவித்திருந்தார்.

இக்கருத்துக்கள் ஒரு இடது சாரித்துவத்துக்குள் இருக்கின்றவர்களின் கருத்துக்கள்தானா என்ற கேள்வி அப்போது ஏற்பட்டிருந்தது. ரில்வின் சில்வாவின் கருத்து அரசாங்கத்தின் கருத்தா? ஜே.வி.பியின் கருத்தா? அல்லது தேசிய மக்கள் சக்தியின் கருத்தா? என்ற சந்தேகங்களும் வெளியிடப்பட்டிருந்தன.

தமிழர்கள் விடயத்தில் இலங்கையில் ஒற்றையாட்சியே தொடரவேண்டும் - பாராளுமன்றத்தின் அதிகாரங்களைப் பகிரக் கூடாது, தமிழர்களின் பாரம்பரிய தாயகத்தை அங்கீகரிக்க மறுத்தல், அரசியல் விவகாரங்கள் மற்றும் பொருளாதாரத்தில் வெளிநாட்டுத் தலையீடு வர அனுமதிக்க விடாது தடுத்தல், தமிழர்களுக்கு எதிரான போர்க்குற்றங்கள், மனிதக் குலத்திற்கு எதிரான குற்றங்கள் மற்றும் இனப்படு கொலைகளுக்கு சர்வதேச குற்றவியல் நீதிப் பொறிமுறையை நிறுவுவதற்கான எந்தவொரு சர்வதேச நடவடிக்கையையும் எதிர்க்க வேண்டும் போன்ற முடிவுகளான தீர்மானங்களைக் கொண்டதே ஜே.வி.பி.

அந்த ஜே.வி.பி. ஜெனிவாவில் நடைபெற்று வருகின்ற மனித உரிமைப் பேரவையின் கூட்டத்தொடரில், அமைச்சர் விஜித ஹேரத்தைக் கொண்டு விடுத்திருக்கின்ற அறிவிப்பு ஆச்சரியப்படுவதற்குத் தேவையற்றதே.

ஆயுதப் புரட்சி இயக்கமான ஜே.வி.பியினர் ஆயுத வழியினைத் துறந்த பின்னர் இலங்கையில் மிக மோசமான சிங்கள இனவாத கட்சியாகவே படிநிலையாக வளர்ச்சியடைந்திருக்கிறார்கள். காலா காலமாகத் தமிழர் மீதான தாக்குதல்களைத் தொடர்ந்து வந்த, அரசாங்கங்கள் செய்கின்ற போது, மிகத் தீவிரமாக அந்த அரசாங்கங்களுடன் இணைந்து செயற்பட்ட கட்சியாகவே ஜே.வி.பி. இருக்கிறது. இவ்வாறான நிலையில், தற்போதைய ஜெனிவாவானது தமிழர்களுக்கான நீதி வழங்குவதற்கான இடமாகப் பார்க்கப்படுகின்ற நிலையில், சிங்களவர்கள் மாத்திரமல்ல, ஜே.வி. பியும் கூட தன்னுடைய கொள்கைகளை மாற்றப் போவதில்லை என்பது மாத்திரமே உறுதியானது.

யுத்த மௌனிப்பின் பின்னர் தமிழர்களால் மேற்கொள்ளப்பட்டுவந்த எந்தவொரு இராஜதந்திர முயற்சிகளுக்கும் வெற்றி கிடைக்கவேயில்லை. நாட்டில் புதிதாகத் தெரிவு செய்யப்படும் ஜனாதிபதி பொறுப்புக் கூறலை உறுதி செய்து நல்லிணக்கத்தைப் பேண வேண்டும் என்று மனித உரிமைகளுக்கான ஐக்கிய நாடுகளின் உயர்ஸ்தானிகர் வோகர் டர்க் கடந்த 2024 செப்டெம்பர் அமர்வுக்கான முன் அறிக்கையில் தெரிவித்திருந்தபோதிலும் உள்நாட்டு பொறிமுறை என்ற வரையறைக்குள்ளேயே அரசாங்கம் சுற்றிக் கொண்டிருக்கிறது.

இன்றைய தினத்திலும் (மார்ச் 03) இதே விதமான நிலைமையே தமிழர்களுக்கு ஏற்படும். தமிழர்கள் நீதியைத் தொடர்ந்தும் தேடுபவர்களாகவே இருக்க முடியுமே தவிர, வேறொன்றுமில்லை. காணாமல்போனோருக்கான நீதி, போர்க்குற்ற விசாரணை போன்றவைகள் மட்டுமல்லாமல் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வினைக் கூட சர்வதேசம் பெற்றுத்தந்தாலேயொழிய தமிழர்களுக்குத் தீர்வு கிடைக்கப் போவதில்லை என்பது மாத்திரமே நிச்சயம்.

## கடிதங்கள்

### குப்பைகளால் பொது மக்கள் அசௌகரியம்

மகாவலி நதிக்கு நீர் வழங்கும் கால்வாயான ஹட்டன் ஓயாவில், குப்பைகள் கொட்டப்படுவதால், கடுமையான சுற்றுச்சூழல் அழிவு ஏற்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஹட்டன், மல்லியப்பு சந்தியில் சிலர் வேண்டுமென்றே குறித்த ஓயாவில் குப்பைகளைக் கொட்டுவதாக இந்த சூழ்நிலைகள் குறித்து கருத்து தெரிவித்த சிலர் கூறுகின்றனர்.

இவ்வாறு கால்வாயில் குப்பைகளைக் கொட்டுவதால், அந்த கால்வாயைச் சுற்றியுள்ள பகுதிகளில் உள்ள சுற்றுச்சூழல் கடுமையாக பாதிக்கபடுவதுடன், இந்தக் கால்வாயின் நீரைப் பயன்படுத்தும் ஹட்டன், மல்லியப்பு சந்தி, ஸ்ட்ராடன், ஷானன், வட்டவளை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த மக்களின் உடல் நலத்திற்கு பல்வேறு அச்சுறுத்தல்கள் ஏற்படும் அபாயமும் உள்ளது.

இந்த சூழ்நிலைகள் குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மிகுந்த கவனம் செலுத்தி, இந்தக் கால்வாயில் குப்பைகளைக் கொட்டுபவர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.



# 'ஹேலிஸ்' தோட்டங்களுக்கிடையில் கடும் போட்டி; இரேஷா சாதனை



'ஹேலிஸ்' பெருந்தோட்ட நிறுவனத்தின் கீழ், பணியாற்றும் பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கிடையில் நடத்தப்பட்ட கொழுந்து பறிக்கும் போட்டியில், சுமார் 15 நிமிடங்களுக்குள் 8 கிலோ கிராம் கொழுந்தை பறித்து முதலிடத்தைப் பெற்ற தலவாக்கலை கிரேட் வெஸ்டன் தோட்டத்தைச் சேர்ந்த எந்தனி இரேஷா ராஜலட்சுமிக்கு 650,000 ரொக்கப் பரிசுடன் வர்ண தொலைக்காட்சி பெட்டி ஒன்றும் பரிசாக வழங்கப்பட்டது.

3ஆவது தடவையாக ஹேலிஸ் பெருந்தோட்ட நிறுவனத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட, தொழிலாளர்களின், சிறந்த கொழுந்து பறிப்பாளரைத் தெரிவு செய்வதற்கான இறுதிப் போட்டி, நானுஓயா-ரதல்ல பிரதேசத்தில் சனிக்கிழமை (01) அன்று நடைபெற்றதுடன், அதன் பின்னர் பரிசு வழங்கும் நிகழ்வு, ரதல்ல விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக ஹேலிஸ் நிறுவனத்தின் தலைவர் மொஹான் பண்டித்த கே மற்றும் நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் ரொஷான் ராஜதுரை கலந்து சிறப்பித்தனர்.

குறித்த போட்டியில் ஹொரண, தலவாக்கலை மற்றும் களனி வெளி ஆகிய பெருந்தோட்ட நிறுவனங்களின் கீழுள்ள 60 தோட்டங்களைச் சேர்ந்த 50 போட்டியாளர்கள் கலந்து கொண்டனர்.

இவர்களுக்காக 15 நிமிடங்கள் வழங்கப்பட்டதுடன், குறித்த நிமிடங்களுக்குள் தரமுள்ள அதிக கிலோ கொழுந்தைப் பறிப்பவர்களுக்கே முதல் 3 இடங்கள் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய 3 பெருந்தோட்ட கம்பெனிகளிலிருந்தும் வெண்கல பதக்கத்தைப் பெற்று 3ஆம் இடத்தை, களனி வெளி பெருந்தோட்ட கம்பெனியின் M.மாரியாய், தலவாக்கலை பெருந்தோட்ட கம்பெனியின் வீரையா வனிதா மற்றும் ஹொரண பெருந்தோட்ட கம்பெனியின், P.சந்திரலேகாவும் பெற்றுக் கொண்டுள்ளனர். அத்தோடு வெள்ளி பதக்கத்தை பெற்று 2ஆம் இடத்தை, களனிவெளி பெருந்தோட்ட கம்பெனியின் சுப்பிரமணியம் கோமதி, தலவாக்கலை பெருந்தோட்ட கம்பெனியின் தர்மலிங்கம் பூமணி, ஹொரண பெருந்தோட்ட கம்பெனியின் K.கவிதா ஆகியோர் பெற்றுக் கொண்டுள்ளனர்.' இப் போட்டியில் முதலாம் இடத்தை பெற்று தங்க பதக்கத்தை களனி வெளி பெருந்தோட்ட கம்பெனியின் M.இந்திராகாந்தி, தலவாக்கலை பெருந்தோட்ட கம்பெனியின் எந்தனி இரேஷா ராஜலெட்சுமி, ஹொரண பெருந்தோட்ட கம்பெனியின் சுகுமாரன் ராஜலட்சுமி ஆகியோர் வென்றுள்ளனர்.

















# EDEX Expo 2025 உடன் Nebula Institute of Technology கைகோர்ப்பு

SLT-MOBITEL, கல்விச் சிறப்புக்கான தனது அர்ப்பணிப்பை மேலும் உறுதி செய்யும் வகையில், EDEX Expo 2025இன் உத்தியோகபூர்வ தொலைத்தொடர்பாடல் பங்காளராக கைகோர்த்துள்ளது. இலங்கையின் மாபெரும் கல்வி கணக்காட்சி மற்றும் தொழிற்சந்தையான இந்நிகழ்வின் பங்காண்மையை தொடர்ச்சியாக பத்து வருடங்களுக்கு மேலாக நீடித்துள்ளது.

EDEXExpo 2025 அண்மையில் தனது ஆரம்ப நிகழ்வை கொழும்பு BMICHஇலும், இரண்டாம் நிகழ்வை கண்டி சிட்டி சென்ரரிலும் அண்மையில் முன்னெடுத்தது.

கொழும்பு BMICH மற்றும் கண்டி சிட்டி சென்ரரில் நடைபெற்ற இரு EDEX Expo 2025 நிகழ்வுகளுக்கும் இலவச Wi-Fi இணைப்பு வசதியை SLT-MOBITEL வழங்கியிருந்தது. அதனூடாக, விஜயம் செய்வோருக்கு ஒப்பற்ற டிஜிட்டல் அணுகலை உறுதி செய்திருந்ததுடன், கண்காட்சியாளர்களுக்கும் பங்காளர்களுக்கும் தமது கல்வித் தீர்வுகளை வினைத்திறனான முறையில் வெளிப்படுத்த வாய்ப்பளித்திருந்தது.

ஒப்பற்ற டிஜிட்டல் இணைப்புத்திறன் மற்றும் மேம்படுத்தப்பட்ட கல்வி வாய்ப்புகள் போன்றவற்றினூடாக, இலங்கையின் இளைஞர்களுக்கு வலுவூட்டும் SLT MOBITEL இன் நோக்கத்தை இந்த கைகோர்ப்பு மீளுறுதி செய்திருந்தது.
















SLT MOBITEL இன் கல்விப் பிரிவான SLT-MOBITEL's Nebula Institute of Technology, தொடர்ச்சியான இரண்டாவது ஆண்டாகவும் நிகழ்வின் தங்க அனுசரணையாளராக கைகோர்த்திருந்தது. நிகழ்வில் தனது நவீன தொழில்நுட்பக் கற்கைகள் பற்றிய விளக்கங்களை காட்சிப்படுத்தியிருந்தது.

EDEX Expo உடன் கைகோர்த்திருந்ததனூடாக, மாணவர்களுக்கு சர்வதேச வாய்ப்புகளை கண்டறிவதற்கான சூழலை ஏற்படுத்தியிருந்ததுடன், தமது தொழில்நிலையை மேம்படுத்திக் கொள்ளவும் வாய்ப்பளித்திருந்தது. இலங்கையின் அடுத்த தலைமுறை தொழினுட்ப நிபுணர்கள் மத்தியில் நிறுவனத்தின் விரிவாக்கமடைந்து செல்லும் ஆற்றலுக்கு SLT-MOBITEL வழங்கும் பங்களிப்பு வெளிப்படுத்தப்பட்டிருந்தது.

2004ஆம் ஆண்டில் அறிமுகம் செய்யப்பட்டது முதல் தற்போது 21 ஆம் நூற்றாண்டு பூர்த்தியை கொண்டாடும் EDEX Expo, இலங்கையின் முன்னணி கல்வி கண்காட்சியாக தன்னை தரமுயர்த்தியுள்ளதுடன், இலங்கையின் இளைஞர்களுக்கு சர்வதேச மட்டத்தில் போட்டிகரமாக திகழ்வதற்கு வலுவூட்டியிருந்தது. சிறந்த வரவேற்பைப் பெற்றுள்ள EDEX Expo தொடர்ந்தும் மாணவர்களை 200 க்கும் அதிகமான புகழ்பெற்ற உள்நாட்டு மற்றும் சர்வதேச கல்வி நிலையங்களுடன் இணைத்த வண்ணமுள்ளது.

ஆயிரக் கணக்கான மாணவர்கள்,பெற்றோர்கள் மற்றும் நிபுணர்கள் கொழும்பிலும், கண்டியிலும் நடைபெற்ற EDEX Expo 2025 நிகழ்வுகளில் கலந்து கொண்டனர். நிகழ்வில் முன்னெடுக்கப்பட்ட தொழில் சந்தையினூடாக, விருந்தினர்களுக்கு தொழில் வழங்குனர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி, காணப்படும் தொழில் வாய்ப்புகள் பற்றி அறிந்து கொள்ளவும் வாய்ப்பளித்திருந்தது.

# 'The Colombo Border' திட்டவிஸ்தரிப்புக்கு முதலீட்டு சபை அனுமதி

Prime Lands Residencies PLC இன் The Grand Ward Place திட்டம் வெற்றிகரமாக அமைந்திருந்ததை தொடர்ந்து, Colombo Border திட்டத்தை விரிவாக்கம் செய்வதற்காக முதலீட்டு சபையிடமிருந்து 65 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கான அனுமதியை பெற்றுக் கொண்டுள்ளது. Prime Lands இன் ஏற்கனவே காணப்படும் முதலீட்டு சபை செயற்திட்ட பிரிவில் குறிப்பிடத்தக்களவு விரிவாக்கமாக இந்த முதலீடு அமைந்திருக்கும்.

முதலீட்டு திட்டத்தின் தகுதியாக, தரம் மற்றும் பொறுப்புணர்வை அதிகரிக்கும் வகையில் இது வடிவமைக்கப்பட்டுள்ளது. தோற்றப்பாட்டுக்கு முன்னுரிமையளித்து, அதன் உறுதிமொழியை நிறைவேற்றும் வகையில் செயற்திட்டத்தின் விருத்தியை, கட்டுமானத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் அவதானிக்கக்கூடியதாக இருக்கும்.

நாட்டின் வேகமாக வளர்ந்து வரும் நகரமயமாக்கலில் புதிய நியமங்களை ஏற்படுத்தும் வகையில் The Colombo Border திட்டம் அமைந்திருக்கும். இலங்கையில் நகர வாழிடம் தொடர்பான உறுதியான அறிக்கையை வெளியிட்டுள்ளதுடன், வாழ்க்கைமுறை அனுபவங்கள் மற்றும் வதிவிட விருத்தி போன்றவற்றில் நாட்டின் எதிர்காலத்தை அடையாளப்படுத்துவதாகவும் இது அமைந்துள்ளது. மேலும், The Colombo Border திட்டத்தினூடாக இலங்கையின் நகரமயமாக்கல் கட்டமைப்பில் பொருத்தமான வாழ்க்கைமுறையை கட்டியெழுப்பும் உறுதிமொழியை அடிப்படையாகக் கொண்ட வழிமுறையும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தில் மூன்று கண்கவர் சொகுசுடவர்கள் அடங்கியிருக்கும். இதில் உயரமான டவரில் 26 மாடிகள் அடங்கியிருக்கும். ஒவ்வொரு டவரும் உயர் தரம் வாய்ந்த மூலப்பொருட்களைக் கொண்டு நிர்மாணிக்கப்பட்ட தொடர்மனைங்களை கொண்டிருப்பதுடன், வசிப்போருக்கு நவீன சொகுசு அனுபவத்தை வழங்குவதாகவும் அமைந்திருக்கும்.

இந்த தொகுதியில் மொத்தமாக 484 சொகுசு தொடர்மனைகள் அடங்கியிருக்கும். இவை ஒவ்வொன்றும் நவீன வடிவமைப்பு மற்றும் சௌகரியம்




ஆகியவற்றுக்கான எடுத்துக்காட்டாக அமைந்திருக்கும். ஒவ்வொரு வீட்டு உரிமையாளருக்கும் அதிகளவு இடவசதி படைத்த இரண்டு மற்றும் மூன்று படுக்கையறைகளைக் கொண்ட அலகுகளை அணுக முடியும். அவை அனைத்தும், Prime Lands Residencies இன் தரத்தை பிரதிபலிப்பதாக காணப்படும்.

6 ஏக்கர் பரந்த காணியில் நிர்மாணிக்கப்படும் இந்தத் திட்டத்தின் சுமார் 80% ஆன பகுதி திறந்த, பசுமையான வெளிகளை கொண்டதாக இருக்கும். அதனூடாக, நகரத்தின் சௌகரியத்துடன், இயற்கை அம்சங்களை அனுபவிக்கும் வசதி வசிப்போருக்கு ஏற்படுத்தப்படுத்தப்படும்.

இன்று, Colombo Border திட்டம் முன்னேற்றத்தின் எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது. 3,000க்கும் அதிகமான நேரடி மற்றும் மறைமுக தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்தும் வாய்ப்பை கொண்டுள்ளதுடன், இல்லங்களையும், எதிர்காலங்களையும் கட்டியெழுப்பி, உள்நாட்டு பொருளாதாரத்துக்கு பெருமளவு பங்களிப்பு செலுத்துகின்றது.

Colombo Border திட்டத்தின் புரட்சிகரமான அங்கமாக, அதன் சகாயத்தன்மை அமைந்துள்ளது. Prime Lands Residencies ஊடாக புரட்சிகரமான மாதமொன்றுக்கு 1% கொடுப்பனவு திட்டம் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. சமூகத்தின் பரந்தளவு பிரிவினருக்கு சொகுசான வாழிட அனுபவத்தை பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது. புத்தாக்கமான கொடுப்பனவு திட்டங்களினூடாக, உயர் மட்ட வதிவிடங்கள் தொழில்புரியும் குடும்பங்களால் அணுகக்கூடியமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

தரம் மற்றும் வெளிப்படைத்தன்மை போன்றவற்றுக்கான Prime Lands' இன் அர்ப்பணிப்பு என்பதுடன், முதலீட்டு சபையின் மேற்பார்வையினூடாக, Colombo Border திட்டம் வசிப்போருக்கும் முதலீட்டாளர்களுக்கும் சிறந்த பெறுமதியை ஏற்படுத்திக் கொடுக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது. உறுதிமொழியளிக்கப்பட்ட வாழக்கை முறையினூடாக சொகுசு மற்றும் சகாயத்தன்மை என்பன வாழ்வுடன் இணைக்கப்படுவதுடன், இயற்கை அழகுடன், நகர வாழ்க்கையை அனுபவிப்பதற்கு வாய்ப்பளிப்பதாகவும் அமைந்திருக்கும்.

துருக்கி

துருக்கியில்

# முடிவுக்கு வந்தது உள்நாட்டு போர்

துருக்கியில், 40 ஆண்டுகாலமாக நடந்து வந்த உள்நாட்டுப் போரை நிறுத்துவதாக, குர்திஸ் தொழிலாளர் கட்சி அறிவித்துள்ளது.

துருக்கியில், கடந்த 1978ஆம் ஆண்டு, அப்துல்லா ஒசலான் உருவாக்கிய குர்திஸ்தான் தொழிலாளர் கட்சி, 1984ஆம் ஆண்டு முதல் கிளர்ச்சியை ஏற்படுத்தி, உள்நாட்டுப் போரில் ஈடுபட்டு வந்தது.

இதனால், குர்திஸ்தான் தொழிலாளர் கட்சி தடை செய்யப்பட்டதோடு, துரோக குற்றச்சாட்டில் 1999ஆம் ஆண்டு ஒசலான் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

இதனிடையே, 40 ஆண்டுகளாக நடந்த உள்நாட்டுப் போரில், 30 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டனர்.

இந்த போரால் தென்கிழக்கு துருக்கி, சிரியா, வடக்கு ஈராக் மற்றும் ஈரான் உள்ளிட்ட பல்வேறு நாடுகளைச் சேர்ந்த மக்கள் பாதிக்கப்பட்டனர்.

இந்த சூழலில், குர்திஸ்தான் தொழிலாளர் கட்சியின் ஆயுதப்போராட்டத்தை முடிவுக்குக் கொண்டு வர விரும்புவதாக, அந்த அமைப்பின் தலைவர் ஒசலான் கருத்து தெரிவித்தார்.



இதனையடுத்து, துருக்கியில் 40 ஆண்டுகாலமாக நடந்து வந்த உள்நாட்டுப் போரை நிறுத்துவதாக, குர்திஸ் தொழிலாளர் கட்சி அதிகாரப்பூர்வமாக அறிவித்துள்ளது.

“தங்கள் மீது தாக்குதல் நடத்தப்பட்டாது வரை, இனி ஆயுதம் ஏந்தி போராட மாட்டோம்” என்று, குர்திஸ் தொழிலாளர் கட்சி அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



சீனா

படகுகள் மோதி விபத்து:

# நீரில் மூழ்கி 11 பேர் பலி

சீனாவின் ஹூனான் மாகாணத்தில் உள்ள ஆற்றில் படகுகள் மோதி விபத்துக்குள்ளானதில், 11 பேர் உயிரிழந்துள்ளனர்.

ஹூனான் மாகாணத்தில் அமைந்துள்ள யுவான்ஷுய் என்ற ஆற்றை சுற்றியுள்ள பகுதிகளில் வசிக்கும் மக்களுக்குப் படகு போக்குவரத்தே பிரதானமாக உள்ளது. அந்த ஆற்றில் ஏராளமான படகுகள் செல்வது வழக்கம். இந்நிலையில், படகொன்று பொதுமக்களை ஏற்றிச் சென்றுகொண்டிருந்த போது, அந்த ஆற்றில் எண்ணெய் கசிவைச் சுத்தம் செய்யும் ஒரு பெரிய படகும் சென்று கொண்டிருந்தது. இதன்போது குறித்த இரு படகுகளும் ஒன்றையொன்று மோதி விபத்துக்குள்ளானதில், படகில் இருந்த பலர் ஆற்றில் தவறி விழுந்துள்ளனர்.

தகவலறிந்த மீட்புப் படையினர் அங்குச் சென்றதும் தண்ணீரில் தத்தளித்துக் கொண்டிருந்தவர்களை மீட்கும் பணி துரிதப்படுத்தப்பட்டுள்ளது. எனினும், இந்த விபத்தில் 11 பேர் ஆற்றில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

வாடிகன் சிட்டி

# போப் பிரான்சிஸுக்கு மீண்டும் மூச்சுத் திணறல்

கத்தோலிக்க கிறிஸ்தவ மத தலைவரான போப் பிரான்சிஸ் (88 வயது), இருமல், வாந்தி, மூச்சுத்திணறலால் பாதிக்கப்பட்டுள்ளதாக வாடிகன் தெரிவித்துள்ளது.

போப் பிரான்சிஸ் சுவாசப் பிரச்சினை காரணமாக கடந்த பிப். 14ஆம் திகதி ரோம் நகரில் உள்ள ஜெமெல்லி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

அவருக்கு சுவாசப் பாதையில் தொற்று ஏற்பட்டு நிமோனியா பாதிப்பு ஏற்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

தீவிர சிகிச்சை பெற்று வந்த போப் பிரான்சிஸ்க்கு கடந்த பிப். 22ஆம் திகதி ஆஸ்துமா பாதிப்பு அதிகரித்தது.

இரத்தத்தில் பிளேட்லெட் எண்ணிக்கை குறைந்ததால் அவருக்கு இரத்த மாற்று சிகிச்சையும் நடைபெற்றது. தொடர்ந்து அவர் சிகிச்சை பெற்று வரும் நிலையில், அவது உடல்நிலை தொடர்பாக வாடிகன் அறிக்கை வெளியிட்டுள்ளது.



அதில், “போப் ஆண்டவருக்கு வெள்ளிக்கிழமை மதியம் மூச்சுக்குழாய் பிடிப்பு (bronchospasm) என்ற ஒரு பாதிப்பு ஏற்பட்டது. இதனால் வாந்தி ஏற்பட்டது. மேலும், அவரது சுவாச நிலை திடீரென மோசமடைந்தது.

அவருக்கு உடனடியாக சுவாசப் பாதைகள் சுத்தம் செய்யப்பட்டன. மேலும், அவருக்கு இயந்திர காற்றோட்டம் வழங்கப்பட்டது, இது அவரது ஆக்ஸிஜன் அளவை மேம்படுத்தியது” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

போப் பிரான்சிஸுக்கு சிகிச்சை அளித்து வந்த மருத்துவர்களிடமிருந்து தொடர்ந்து இரண்டு நாட்களாக உற்சாகமான அறிக்கைகள் வந்த நிலையில், இந்த அறிக்கை ஒரு பின்னடைவைக் குறிக்கிறது.

உலகம் முழுவதும் உள்ள கிறிஸ்தவ மக்கள் போப் உடல்நலம் பெற்று மீண்டு வர பிரார்த்தனை செய்து வருகின்றனர்.

புதுடெல்லி

பழைமையான வாகனங்களுக்கு

# இனி எரிபொருள் இல்லை

புதுடெல்லியில், 15 ஆண்டுகள் பழைமையான வாகனங்களுக்கு இனி எரிபொருள் கிடையாது என, மாநில சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கூறியுள்ளார்.

புதுடெல்லியில், காற்று மாசுபாட்டால் மக்கள் கடும் இன்னல்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

இந்த விவகாரம், சமீபத்தில் நடந்து முடிந்த தேர்தலிலும் எதிரொலித்தது. ஆம் ஆத்மியும், பா.ஜ.க.வும் பிரசாரத்தின்போது இதுபற்றி காரசார விவாதத்தில் ஈடுபட்டன.

இந்நிலையில், “புதுடெல்லியில் 15 ஆண்டுகள் பழமையான வாகனங்களுக்கு பெட்ரோல் பம்புகளில் இனி எரிபொருள் வழங்கப்படமாட்டாது” என, டெல்லி சுற்றுச்சூழல் துறை அமைச்சர மன்ஜீந்தர் சிங் சிர்சா, ஞாயிற்றுக்கிழமை (2) கூறியுள்ளார்.

“புதுடெல்லியில், மாசுபாட்டைக் கட்டுப்படுத்தும் நோக்கில் இந்த திட்டம் மார்ச் 31ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வருகிறது.

“இந்த முடிவு பற்றி மத்திய பெற்றோலிய துறை அமைச்சுக்கும் தகவல் தெரிவிக்கப்படும்” என்றார்.

அத்துடன், “15 ஆண்டுகள் பழமையான வாகனங்களை



அடையாளம் காணும் வகையில், பெட்ரோல் பம்புகளில் நாங்கள் கருவிகளை இணைத்து வருகிறோம். அவற்றின் உதவியுடன் பழமையான வாகனங்கள் இனங்காணப்பட்டு, அவற்றின் உரிமையாளர்களுக்கு எரிபொருள் தரப்படாது” என்றும் அவர் கூறியுள்ளார்.

“டெல்லியில், எரிபொருள் விநியோக கட்டுப்பாடுகளுடன், உயர்ந்த கட்டிடங்கள், ஓட்டல்கள், டெல்லி விமான நிலையங்கள் மற்றும் வர்த்தக வளாகங்கள் அனைத்தும் புகை மூட்டம் ஏற்படாத வகையில் அதனை கட்டுப்படுத்தும் துப்பாக்கிகளை நிறுவ வேண்டும்.

“நடப்பு ஆண்டு டிசெம்பருக்குள் பொது போக்குவரத்திற்குப் பயன்படக்கூடிய, 90 சதவீத சி.என்.ஜி. பஸ்களை நீக்கி விட்டு அவற்றுக்கு மாற்றாக, மின்சார பஸ்கள் அறிமுகப்படுத்தப்படும்” என்றும் அவர் கூறியுள்ளார்.

புதுடெல்லி

இம்மாதம் பாஜகவின் புதிய

# தேசிய தலைவரை தேர்ந்தெடுக்க திட்டம்



மாநில அமைப்புகளுக்கான தேர்தலை இம்மாதம் நடத்தி முடித்த பிறகு புதிய தேசிய தலைவரைத் தேர்ந்தெடுக்க பாஜக திட்டமிட்டுள்ளது.

இத்தேர்தலைக் கடந்த ஜனவரியில் நடத்த பாஜக திட்டமிருந்தது. ஆனால் டெல்லி சட்டப்பேரவை தேர்தல் மற்றும் பல்வேறு மாநில அமைப்புகளில் தேர்தல் நிலுவையில் இருப்பதால் இத்திட்டம் ஒத்திவைக்கப்பட்டது.

பாஜகவின் அமைப்பு விதிகளின்படி தேசிய தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்கு முன்பு குறைந்தது 50% மாநில அமைப்புகள் தங்கள் தலைவர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

தற்போது, 36 மாநிலங்களில் 12இல் மட்டுமே தேர்தல்கள் முடிந்துள்ளன. எனவே தேசிய தலைவர் தேர்தலுக்குக் குறைந்தபட்சம் இன்னும் 6 மாநிலங்களில் தேர்தல் முடிக்க வேண்டியுள்ளது.

பிஹார், உத்தரப்பிரதேசம், மத்தியப்பிரதேசம், கர்நாடகா, ஹரியானா உள்ளிட்ட முக்கிய மாநிலங்களில் இத்தேர்தல்கள் 7 முதல் 10 நாட்களுக்குள் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்த தேர்தல்கள் முடிந்ததும் புதிய தேசிய தலைவரை பாஜக தேர்ந்தெடுக்கும் என கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.



சம்பியன்ஸ் கிண்ணம்: இங்கிலாந்தை வீழ்த்தி

# அரையிறுதியில் தென்னாபிரிக்கா

சர்வதேச கிரிக்கெட் சபையின் சம்பியன்ஸ் கிண்ணத் தொடரின் அரையிறுதிப் போட்டிக்கு தென்னாபிரிக்கா தகுதி பெற்றுள்ளது.

ஆப்கானிஸ்தானை தென்னாபிரிக்கா வென்றதுடன், அவுஸ்திரேலியாவுடனான போட்டியில் முடிவேதும் பெறப்படாத நிலையில், கராச்சியில் சனிக்கிழமை (01) நடைபெற்ற இங்கிலாந்துடனான போட்டியில் வென்றமையைத் தொடர்ந்தே குழு பியில் ஐந்து புள்ளிகளுடன் முதல்நிலை அணியாக அரையிறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றுள்ளது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து, மார்கோ ஜன்சன் (3), கேஷவ் மஹராஜ் (2), வியான் முல்டர் (3), ககிஸோ றபாடா, லுங்கி என்கிடியிடம் விக்கெட்டுகளைப் பறிகொடுத்து 38.2 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 179 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில் ஜோ றூட் 37 (44), ஜொஃப்ரா ஆர்ச்சர் 25 (31) ஓட்டங்களைப் பெற்றனர்.

பதிலுக்கு 180 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா, றஸி வான் டர் டுஸனின் ஆட்டமிழக்காத 72 (87), ஹெய்ன்றிச் கிளாசென்னின் 64 (56) ஓட்டங்களோடு 29.1 ஓவர்களில் 3 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது. பந்துவீச்சில் ஜொஃப்ரா ஆர்ச்சர் 2, அடில் ரஷீட் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர். இப்போட்டியின் நாயகனாக ஜன்சன் தெரிவாகினர்.

சர்வதேச மாஸ்டர்ஸ் லீக்:

# தென்னாபிரிக்காவை வென்ற இந்தியா

சர்வதேச மாஸ்டர்ஸ் லீக் தொடரில், வதோதராவில் சனிக்கிழமை (01) நடைபெற்ற தென்னாபிரிக்க மாஸ்டர்ஸ் அணியுடனான போட்டியில் இந்திய மாஸ்டர்ஸ் அணி வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: இந்தியா

தென்னாபிரிக்கா: 85/10 (13.5 ஓவ. ) (துடுப்பாட்டம்: ஹென்றி டேவிட்ஸ் 38 (28), டேன் விலாஸ் 21 (15) ஓட்டங்கள். பந்துவீச்சு: யுவ்ராஜ் சிங் 3/12 [4], ராகுல் ஷர்மா 3/18 [4], ஸ்டுவர்ட் பின்னி 1/2 [0.5], பவான் நீகி 2/21 [4])

இந்தியா: 89/2 (11 ஓவ. ) (துடுப்பாட்டம்: அம்பாதி ராயுடு ஆ.இ 41 (34), பவான் நீகி ஆ.இ 21 (12) ஓட்டங்கள். பந்துவீச்சு: தன்டி தஷபலா 1/20 [4], எடி லீ 1/32 [4], வேர்னன் பிலாந்தர் 0/7 [1])

போட்டியின் நாயகன்: ராகுல் ஷர்மா




# சாய்ந்தமருது பிளாஸ்டரின் சீருடை அறிமுகம்

நூருல் ஹுதா உமர்

சாய்ந்தமருது பிளாஸ்டர் விளையாட்டுக் கழக சீருடை அறிமுகம், வீரர்கள் கௌரவிப்பு மற்றும் வர்ண இரவு கலை நிகழ்ச்சிகள் கழக செயலாளர் எம்.எல்.எம்.பஸ்மீரின் நெறிப்படுத்தலில் கழகத் தலைவர் எம்.ஐ.எம்.றிபாஜ் தலைமையில் சாய்ந்தமருது அல்- ஜலால் வித்தியாலய கேட்போர் கூடத்தில் வெள்ளிக்கிழமை (28) கோலாகலமாக நடைபெற்றது.



# மருதமுனை அல்மனாரில் பூப்பந்தாட்ட விளையாட்டரங்கு

அஸ்லம் எஸ்.மௌலானா



கடந்த அரசாங்க காலத்தில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான பைசால் காசிம், எஸ்.எம்.எம். முஷாரப் ஆகியோரின் நிதியொதுக்கீட்டில் மருதமுனை அல்மனார் மத்திய கல்லூரியில் அமைக்கப்பட்ட உள்ளக பூப்பந்தாட்ட விளையாட்டரங்கு வியாழக்கிழமை (27) கோலாகலமாக திறந்து வைக்கப்பட்டது.

சுகாதார பிரதி அமைச்சராக பைசால் காசிம் பதவி வகித்த காலப் பகுதியில் முன்னாள் மேயர் றகீப் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக 5.2 மில்லியன் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இந்த உள்ளக பூப்பந்தாட்ட விளையாட்டரங்கு அமைக்கும் வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம்.முஷாரப் மேற்கொண்ட நிதியொதுக்கீட்டின் மூலமாக பூர்த்தி செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை 03, மார்ச் 2025, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.